ජල සම්පාදන සහ වතු යටිතල පහසුකම් සංවර්ධන අමාත්‍යාංශය
நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF WATER SUPPLY AND ESTATE INFRASTRUCTURE DEVELOPMENT

මගේ අංකය / எனது இல. / My Ref } FIN/01/01/03 ඔබේ අංකය / உமது இல. / Your Ref } දිනය / திகதி / Date } 2024.08.28.

Secretary

Office of the Leader of the House

Parliament of Sri Lanka

Sri Jayawardanepura, Kotte

Submission of observations and action taken by the Minister in charge of the institutions with regard to the report presented to Parliament by the Committee on Public Accounts – Pertaining to the Special Spending Units, Ministries, Department, Provincial Councils and Local Government Institutions

(Parliamentary series No : 79)

This refers to your letter dated 04th July 2024 regarding the above subject.

02. Accordingly, the report prepared in all 03 languages including 02 CDs (PDF) which contains my observations and the action taken on the matters pertaining to my Ministry is forwarded herewith to be submitted to the Parliament.

Jeevan Thondaman (M.P.)

Minister of Water Supply and Estate Infrastructure Development

නො. 35, "ලක්දිය මැදුර", නව පාර්ලිමේන්තු පාර, පැලවත්ත, බත්තරමුල්ල.
இல. 35, "லக்திய மெதுர", புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்தை, பத்தரமுல்ல.
No. 35, "Lakdiya Medura", New Parliament Road, Pelawatta, Battaramulla.
දුරකථන / தொலைபேசி / Telephone } 011 2177240 / 011 2177241
ෆැක්ස් / தொலைநகல் / Fax } 011 2177242
E-mail : secretary@mws.gov.lk
Web : www.mws.gov.lk

පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය : 79

ආයතනයේ නම : ජල සම්පාදන සහ වතු යටිතල පහසුකම් සංවර්ධන අමාත්‍යාංශය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා

සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ

නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற வெளியீட்டுத்தொடர் இலக்கம் : 79

நிறுவனத்தின் பெயர்: நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் நிறுவனங்களுக்குப்

பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக

எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

Parliamentary Series No:79

Name of the institution :Ministry of Water Supply and Infrastructure Development

Submission of observations of the Hon.Minister in charge of the institutions and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of the standing Oder No.119(4)

நீர் வழங்கல் அமைச்சு
பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல :- 79
முதலாம் பகுதி 89.00

வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை	2022 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகரித்துக் கொள்ளப்பட்டது.
உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் பதில் அளிக்கப்படாத சந்தர்ப்பங்கள் அறிக்கைப்படுத்தப்பட்டிருந்தது.	சிறப்பான மேற்பார்வையுடன் இந்த விடயத்தை மேற்கொள்வதற்காக ஏற்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.
வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பின்போது வெளிப்படுத்தப்பட்ட மேலதிகங்கள், குறைபாடுகள் பற்றிய பரிந்துரைகள் உள்ளிட்ட ஏனைய பரிந்துரைகளும் உரிய காலப் பகுதியினுள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	பொருட்கள் கணக்கெடுப்பின்போது வெளிப்படுத்தப்பட்ட மேலதிகங்கள், குறைபாடுகள் தொடர்பாக தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
அனைத்து வாகனங்களின் உரிமையை உறுதிப்படுத்துகின்ற எழுத்தாவணங்கள் இல்லை	நீர் வழங்கல் சபை மற்றும் நீர் வழங்கல் மற்றும் உடலாரோக்கிய மேம்பாட்டுத் திட்டத்திற்காக வழங்கப்பட்ட வாகனங்களுக்கான பதிவுச் சான்றிதழ்கள் தற்போது எமக்கு கிடைத்துள்ளன. அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் இதுவரை எமக்கு பதிவுச் சான்றிதழ் கிடைக்கப்பெற்றிராத 03 வாகனங்கள் தொடர்பான தகவல்களைக் கண்டறிய தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன,
அனைத்து வாகனங்களிலும் அரச சின்னம் வர்ணம் பூசப்பட்டிருக்கவில்லை.	தற்போது அமைச்சுக் குழாமில் உள்ள அனைத்து வாகனங்களிலும் அரச சின்னம் அச்சிடப்பட்டு ஒட்டப்பட்டுள்ளது.
வாகனமொன்று தீர்த்தொதுக்கப்பட்டு (condemned) 08 மாதங்களுக்கும் குறைவான காலப் பகுதியினுள் புறத்தொதுக்கப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கின்றேன். அந்த சந்தர்ப்பத்தில் புறத்தொதுக்கப்படவிருந்த 03 வாகனங்கள் மீண்டும் பழுதுபார்க்கப்பட்டு பகுதியளவு அரச நிறுவனமான நகர குடியேற்ற அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டன. உரிமையை மாற்றுவதற்கு தேவையான ஆவணங்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தற்போது, அமைச்சில் தீர்த்தொதுக்கப்பட்ட (condemned) வாகனங்களாக அடையாளம் காணப்பட்ட வாகனங்கள் எதுவும் இல்லை.
நி.ஒ. 94(1) இற்கமைய செலவு விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு பயன்படுத்திக்கொள்ளப்பட்டதன் பின்னர் ஆண்டிறுதியில் மீதி நிதி ஏற்பாட்டை விஞ்சும் பிரகாரம் பொறுப்புக்கள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தன.	தற்போது அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டினுள் மாத்திரம் பொறுப்புக்களை ஏற்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட வரையறையை மீறி பணியாளர்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.	இதுவரை, அமைச்சின் பணியாட்குழு அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறவில்லை. அங்கீகரிக்கப்பட்ட பணியாட்குழு - 154 தற்போதைய பணியாட்குழு - 114 வெற்றிடங்களின் எண்ணிக்கை - 40 வெற்றிடங்களை உடனடியாக நிரப்புமாறு பொது நிர்வாக அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நீர் வழங்கல் அமைச்சு
பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல :- 79
முதலாம் பகுதி 62.00

அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய செயாற்றுகை ஒப்பந்தங்கள் தயாரிக்கப்படவில்லை.	ஏற்றுக்கொள்கின்றேன். 2022 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை எனக் குறிப்பிடுகின்றேன். 2023 ஆம் ஆண்டிற்காக உரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 02/2018 (1) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை (2023.11.30) ஊடாக வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்கள் இனிமேல் தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான செயலாற்றுகை ஒப்பந்தங்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.
திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% இற்கும் குறைவாக இருந்தது.	கொரோனா தொற்றுநோய் காரணமாக, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் எதிர்பார்த்த பிரகாரம் நடைபெறவில்லை. 2023 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை, 80% ஆன பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. ஆயினும்கூட, நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சினால் வெளியிடப்பட்ட 01/2024 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவினூடாக பயிற்றுவிப்புக்களுக்காக உள்ளூர் நிதியைச் செலவிடுவதனை வரையறுத்திருப்பதனால் 2024 ஆம் ஆண்டிற்கான பயிற்சி மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வுக் கருத்துரை, கீழ் மட்டத்தில் / துணைநிலை மட்டத்தில்/ தீமை பயக்கும் மட்டத்தில் காணப்பட்டது.	உரிய சட்டங்கள், ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கைகள் மற்றும் நிதி ஒழுங்கு விதிகளுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் அதனூடாக நன்மை பயக்கும் கருத்தொன்றைப் பெற்றுக்கொள்ள முடியுமென எதிர்பார்க்கின்றேன்.
2020.08.28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 12.1 ஆம் பந்திக்கமைய நிறுவனத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் தெளிவாகும் பிரகாரம் அதன் முன்னேற்றத்தை அளவிடுவதற்கு முடியுமான 03	2023 மற்றும் 2024 ஆண்டுகளில் 03 செயலாற்றுகைக் குறிகாட்டிகள் வீதம் இனங்கண்டுகொள்ளப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. (அதன் முன்னேற்றம் இணைப்பு 01 ஊடாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.)

செயலாற்றுகைக் குறிகாட்டிகள் இனங்கண்டுகொள்ளப்பட்டிருக்கவில்லை.	
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	குறித்த பரிந்துரைகளை முடியுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.
அதிகபட்ச சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களை உரிய பிரகாரம் இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	அமைச்சு அதிகாரிகளின் நியமன அதிகாரி பொது நிர்வாக அமைச்சு என்பதால், இடமாற்றங்கள் பொது நிர்வாக அமைச்சினாலலேயே வழங்கப்படல் வேண்டும். அதிகபட்ச சேவைக் காலத்தை பூர்த்தி செய்த அதிகாரிகள் இடமாற்றத்திற்காக பொது நிர்வாக அமைச்சுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். இருப்பினும், இடமாற்றங்கள் வழங்கப்படவில்லை. உரிய பிரகாரம் பதில் அலுவலர்கள் இன்றி அலுவலர்களை பதவிகளிலிருந்து விடுவிப்பதற்கு அமைச்சில் உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமைய வாய்ப்பு இல்லை.

ஜீவன் தொண்டமான்
நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்டகட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்

இணைப்பு 01

ஆண்டு 2023

இல.	செயற்திறன் குறிகாட்டி	அலகு	2023		
			இலக்கு	முன்னேற்றம்	முன்னேற்றம் %
1	உள்ளக குழாய் நீர் வழங்கற் பரப்பினை அதிகரித்தல்	குழாய் நீர் இணைப்புக் களின் எண்ணிக்கை	140,441	106,967	76.16
2	ஊள்ளக குழாய்வழி கழவுநீரகற்றல் வசதிகளை அதிகரித்தல்	குழாய்வழி கழவுநீரகற்றல் இணைப்புக் களின் எண்ணிக்கை	867	338	38.98
3	நீர் வீண்விரயமாவதனை இழிவளவாக்குதல்	%	24	25.14	8.06

ஆண்டு 2024

இல.	செயற்திறன் குறிகாட்டி	அலகு	2 வது காலாண்டு வரை இலக்கு	30.06.2024 க்குள் முன்னேற்றம்
1	உள்ளக குழாய் நீர் வழங்கற் பரப்பினை அதிகரித்தல்	குழாய் நீர் இணைப்புக்களின் எண்ணிக்கை	62,440	56843
2	ஊள்ளக குழாய்வழி கழவுநீரகற்றல் வசதிகளை அதிகரித்தல்	குழாய்வழி கழவுநீரகற்றல் இணைப்புக்களின் எண்ணிக்கை	583	425
3	நீர் வீண்விரயமாவதனை இழிவளவாக்குதல்	%	25.07	24.33